# திருவரங்கத்தமுதனார்



திருவரங்கத்தமுதனார் திருவரங்கத்திலே மூங்கில் குடியில், பங்குனித் திங்கள் அஸ்த நன்னாளிலே அவதரித்தருளினார். இவர் பல கலைகளும் பயின்று,கோவிலில் புரோஹிதராய்ச் செல்வாக்குடன் **“பெரியகோயில் நம்பி”** என்னும் பெயர் பெற்று திகழ்ந்து வந்தார். எம்பெருமானார், பெரிய பெருமாளால்,உபயவிபூதிகளும் தன் இஷ்டப்படி உபயோகித்துக் கொள்ளலாம்படி வழங்கப்பட்டமையின், உடையவராய் கோயில் கார்யங்களை ஆராய்ந்து வரலானார். அக்காலத்திற் பெரிய கோயில் நம்பி, ரஜோ குணம் மிக்கவராய் இருந்தமையால், உடையவருக்கு, கீழ் படியாது கோயில் நிர்வாகத்திற்கு, இடையூறுகள் இழைத்துக் கொண்டிருந்தார். அதனால் உடையவர் மனம் உடைபவராகிப் பெரிய கோயில் நம்பியைக் கோயிலினின்றும் வெளியேற்றத் திருவுள்ளம் பற்றிய போது, பெரிய பெருமாள், உடையவருக்கு,

பெரிய கோயில் நம்பி, தமது நெடுநாள் கைங்கர்யபரர் என உணர்த்தினார்.

எம்பெருமானார், கோயில் நம்பி பால், தமக்குள்ள வருத்தம் நீங்கி, ஆழ்வானைக் கொண்டு அவரைத் திருத்திப் பணிக்கொள்ளத் திருவுள்ளமாகி, நம்பியே சீர்திருத்த்ங்களை ஆதரிக்குமாறு செய்தார். ஆழ்வானின் உபதேசங்களால் மனம் மாறிய நம்பி, எம்பெருமானாரிடம் சிஷ்யராக விரும்பினார். திருத்தமுற்ற நம்பியை, ஆழ்வான் எம்பெருமானாரிடம் பொருத்தமுறச் சேரவிட்டார். நம்பியை உடையவர் அகமகிழ்ந்து முகமலர்ந்து குளிரக் கடாக்ஷித்தருளினார்.பின் நம்பியை ஆழ்வானுடைய சிஷ்யனாகவே ஆக்கினார். அன்பார்ந்து இன்பம் ததும்பும்படி அமைந்த பெரிய கோயில்நம்பியின் சொல்லினிமை நுகர்ந்து, உடையவர் அவருக்கு **“அமுதன்”** என்ற திருநாமம் சாற்றியருளினார். அதிலிருந்து அவருக்கு **“திருவரங்கத்தமுதனார்”** என்ற பெயர் வழங்கலாயிற்று. இதன்பின் அமுதனார், ஆழ்வானிடமும், எம்பெருமானாரிடமும் அளவிறந்த பக்தி பூண்டொழுகலானார். நம்மாச்சாரியர்கள் இவரிடத்திலுள்ள நன்மதிப்புத் தோன்ற “**பிள்ளையமுதனார்**” என்று இவரைக் குறிப்பிடுவர்.

## அமுதனார் பெரியகோயில் நிர்வாகத்தை எம்பெருமானாருக்கு ஸமர்ப்பித்தல்

சில நாட்களுக்குப் பின்னர் அமுதனார், தனது தாயாருக்குச் சரம கைங்கர்யம் செய்ய நேர்ந்தது.

பதினொன்றாம் நாள் ஏகோத்திஷ்டத்திற்கு ப்ராக்ருதரான உறவினர்களை வரிக்கலாகாது; விலக்ஷணரை வரிக்க வேணும் என்னும் தனது கருத்தை அவர் உடையவரிடம் விண்ணப்பித்துக் கொண்டார். மற்றவர்கள் எவருமே துணிந்து ஏற்காத இப்பணியை உடையவர் நியமநத்தினால் ஆழ்வான் அந்த ஏகாஹத்தில் அமர்ந்தார்.அந்த ஸ்தானத்தில் அமர்பவர் த்ருப்தோஸ்மி( திருப்தி அடைந்தேன்) என்று சொன்னாலே ச்ராார்த்தம் சம்பூர்ணமாகும் என்ற நியமம் இருப்பதால், எம்பெருமானாரின் திருவாணைக்கு, பெரிய கோயிலை உட்பட்டதாக்க வேணும் என்ற ஆர்ப்பத்தோடு, ஆழ்வான் அமுது செய்து த்ருப்தி கூறும் காலத்திலே, கோயில் கதவுச் சாவியை தானம் செய்ய சொல்லி, நேரே எம்பெருமானார் மடம் சென்று தொழுது, தேவரீர் நியமித்தபடி ச்ராார்த்த கார்யம் ஆயிற்று. சாவிகள் இதோ சமர்ப்பித்தேன், இனி கோயில் கார்யங்கள் ஸ்வாமி திருவுளப்படி என்று கூறி ஒப்படைத்தார்.

உடையவரும் பெருமாள் திருவாக்கை நினைந்து கோயிலில் புரோஹிதமும் , புராண படநமும் ஆழ்வான் வம்சத்தார்க்கும்,திவ்ய ப்ரபந்த சேவைகளை அரையர்க்கும் ஆக்கி, இயற்பாவை அமுதனார் வம்சத்தார்க்கு ஆக்கி, அவை இன்றளவும் அவ்வாறே நடக்கிறது.அமுதனார் இயற்பாவை ஸந்நிதியிலே ஸேவிக்கும் அந்நாளிலே முன்பு அரையருக்கு நடப்பவைகளான மரியாதைகளனத்தையும், அமுதனாருக்கு நடத்தும்படி ஏற்பாடு செய்தருளினார்.

## இராமானுச நூற்றந்தாதி தோற்றமும் பெருமைகளும்

இப்படி உடையவர் திட்டம் செய்த சில நாட்களுக்குப் பிறகு திருவரங்கத்தமுதனார், எம்பெருமானார் விஷயமாகக் காயத்ரியை உரு எண்ணும் கணக்கிலே நூற்றெட்டுக் கட்டளைக் கலித்துறையில் அமைந்த அந்தாதி நூலை அருளிச் செய்து பெருமாளிடம் விண்ணப்பம் செய்தார். பெருமாள் ஒரு ஸப்தாவரண திருநாளிலே உடையவரை நம்முடனே கூட வரவேண்டாமென்று நியமித்தருளித் திருவீதியிலே ஸகல வாத்யங்களையும் நிறுத்தி, ஸ்ரீ வைஷ்ணவர்கள் இதை அநுஸந்திக்கக் கேட்டுப் போர உகந்தருளினார். அது முதல் இப்பெருமாள் நியமனத்தாலே பெரிய ஸந்நிதியிலே இயற்பா அநுஸந்தித்தவுடன் நூற்றந்தாதியைப் பெருமாள் வரிசையுடன் கேட்டருளுகிறார். நாச்சியார் சந்நிதியிலும் அப்படியே.

பெருமாள் திருவுள்ளத்தை அநுஸரித்து எம்பெருமானார், முதலாயிரத்திலே கண்ணிநுண் சிறுத்தாம்பினைப் போல இயற்பாவில் இறுதியில் இராமாநுச நூற்றந்தாதியையும் சேர்த்து ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவரும் இந்த நூற்றந்தாதியை **ப்ரபந்த காயத்ரியாக** நாடோறும் (தினமும்) அநுஸந்திக்க வேண்டுமென்று கட்டளையிட்டருளினார்.

இந்த இராமானுச நூற்றந்தாதிக்கு முன்னரே எம்பெருமானார் பெருமை பேசும் பிரபந்தமொன்று அமுதனாரால் இயற்றப் பெற்று எம்பெருமானார்

ஸந்நிதியில் ஸமர்ப்பிக்கப்பட்டபோது, அதனை ஏற்காது எம்பெருமானார் “உமக்கு ப்ரபந்தம் செய்ய வேணுமென்கிற நிர்பந்தமுண்டாகில் உமக்கு உத்தேச்யரான ஆழ்வானுடையவும், நமக்கு உத்தேச்யரான ஆழ்வார்களுடையவும் உகந்தருளின நிலங்களுடையவும் ஸம்பந்தம் தோற்ற ஒரு ப்ரபந்தம் செய்யும் என்று நியமித்தருள, அந்நியமநத்திற்கேற்ப இந்த இராமானுச நூற்றந்தாதி விண்ணப்பிக்கப் பட்டதாகவும் சொல்லப் படுகிறது. இதில் இராமனுசன் என்னும் திருநாமம் ஒவ்வொரு பாசுரத்திலும் வருவதால் இப்பெயர் பெற்றது. ஆச்சார்ய அபிமான நிஷ்டர் அறிய வேண்டும் அர்த்தங்கள் யாவும் இதிலுள்ளதால், எம்பெருமானார் ஸம்பந்தம் அடியாக எம்பெருமான் ஸம்பந்தம் நமக்குண்டு என்றும், எம்பெருமானார் திருவடித் தாமரைகளே நமக்கு உத்தாரகம் என்பதை இப்பிரபந்தம் அறிதியிடுகிறது.

சாஸ்த்ரம் அறிந்தவர்களில் தலைவரான நடாதூரம்மாள் “நின்றவன் கீர்த்தி, பேறொன்று மற்றில்லை” என்னும் பாசுரங்களை ஆதாரமாகக் கொண்டு எம்பெருமானாரைப் பற்றுகையே ப்ரபத்தி; ‘ராமானுச’ என்கிற சதுரக்ஷரியே திருமந்திரம்; அவர் திருவடிகளிலே பண்ணும் கைங்கர்யமே பரம புருஷார்த்தம் என்று அறுதியிட்டார்.

“ஆச்சார்யனையே சார்ந்திருக்கும் சரம பர்வ நிஷ்டையே திருமந்திரம், மற்றும் அனைத்துப் பாசுரங்களின் உட்பொருள்”, என்று மதுரகவி ஆழ்வார், நம்மாழ்வார் விஷயமான தம் ப்ரபந்தத்திலும், தம் அனுஷ்டானத்திலும் இதை

காட்டினார். அமுதனாரும் மதுரகவி ஆழ்வார் போன்றே எம்பெருமானாரிடத்துத் தம் ப்ரதிபத்தியை வெளியிடுகிறார். மதுரகவி ஆழ்வார் 11 பாசுரங்கள் மூலமாக தன்னுடைய ஆசார்ய நிஷ்டையை எல்லோருடைய நன்மைக்காகவும் வெளியிட்டாற் போலே, அமுதனாரும் 108 பாசுரங்கள் மூலமாக அனைவரும் ஆச்சார்ய நிஷ்டையைப் பற்றி அறிந்து கொண்டு அனுஷ்டிப்பதற்காக வெளியிட்டார். உபவீததாரிகளுக்கு காயத்ரி போலே ப்ரபன்னர்களுக்கு இது என்று மாமுனிகள் திருவுள்ளம், ஆகையால் இது ப்ரபன்ன ஸாவித்ரி என்று அழைக்கப் படுகிறது.

## அமுதனார் புலமை

அமுதனார் தென்கலையும்(தமிழ்) வடநெறியும் (ஸமஸ்க்ருதம்) திகழ்ந்த நாவர். அவரது அளவற்ற பாண்டியத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு:

திருவிருத்தம் 72ம் பாசுரம்:

**“சூழ்கின்ற கங்குற் சுருங்கா விருளின் கருந் திணிப்பை
போழ்கின்ற திங்களம் பிள்ளையும் போழ்க துழாய் மலர்க்கே
தாழ்கின்ற நெஞ்சத் தொருதமி யாட்டினேன் மாமைக்கின்று
வாழ்கின்ற வாறிது வோவந்து தோன்றிற்று வாலியதே.**

ஆழ்வார் நிலையை, நம்பிள்ளை, அப்பாசுரத்துக்கான தம் உரையில் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

“பராங்குசநாயகி இரவில் எம்பெருமானின் பிரிவை உணர்கிறாள். நிலவில் விரகம் அதிகம். அப்போது வீசும் குளிர் தென்றல் மேலும் கொடிது”.

இத்தலைவின் நிலையை ஒரு கதையின் மூலம் விளக்குகிறார் அமுதனார்.

காட்டு வழியில் தனியே இரவில் சென்று கொண்டிருந்த ஒரு சாது பிராமணனை ஒரு கொடிய விலங்கு துரத்த, அவன் ஓடி ஒருமரத்தின் மேலே ஏறித் தன்னைக் காத்துக்கொண்டான். அப்பொழுது அவ்விலங்கை ஒரு புலி அடித்து உண்கிறது. பிராமணன் நிம்மதி அடையும் போது புலி மேலே மரத்தை நிமிர்ந்து பார்க்க அந்த பிராமணன் இந்த மிகக் கொடிய மிருகத்திடமிருந்து தப்ப வழியேது என்று கலங்கி நின்றான். அந்த பிராமணன் நிலையில், இத்தலைவியும் இருளைப் பிளந்த இளம்பிறையினிடமிருந்து தப்ப வழியின்றித் தளர்ந்த தன் நிலைமையை உரைக்கிறாள் என்று விளக்குகிறார் அமுதனார்.

முடிவுரை: இந்த ஸம்ஸாரத்தில் வீழ்ந்து அழுந்தாதிருக்க வேண்டுமாயின் எதிராசனை சரணடைதல் வேண்டும். முத்தி தரும் எதிராசன் பொன்னடிக்கே மொழிந்த அமுதனார் பாடலை (இராமனுச நூற்றந்தாதியை) அவ்வெதிராசர் அருளாலே பிழையற தினமும் அநுஸந்தித்து, அதில் சொன்ன வண்ணம், அவ்வெதிராசர் தொண்டருடன் அன்புற்றுச் சேர்ந்து இருத்தல் வேண்டும். பின்னர் மோக்ஷம் ஸித்திக்கும்.

இதனை மணவாளமாமுனிகள் ஆர்த்தி பிரபந்தத்திலே அருளிச் செய்கிறார். அப்பாசுரம் இது
“ நந்தா நரகத்தழுந்தாமை வேண்டிடில் நானிலத்தீர்!
எந்தாதையான எதிராசனை நண்ணும் என்றும் அவன்
அந்தாதி தன்னை அநுசந்தியும் அவன் தொண்டருடன்
சிந்தா குலம் கெடச் சேர்ந்திரும் முத்திபின் சித்திக்குமே”.

இப்பாசுரத்தில், நாம் ஆச்சார்ய பக்தியில் இடையறாதிருந்து எம்பெருமானாரிடம் சரணடைந்து, இராமனுசர் அடியார்களுடன் பொழுது போக்கி, இராமானுச நூற்றந்தாதியை அநுஸந்தித்து, சம்சாரக் கடலை தாண்டலாம் என்கிறார் மாமுனி.

அமுதனார் பாகவத நிஷ்டையில் நிலை நின்று, எம்பெருமானார் மற்றும் ஆழ்வானின் அபிமானத்தை பெற்றது போல், நாமும் பாகவத நிஷ்டையை அடைய இவர் திருவடிகளில் ப்ரார்த்திப்போம்.

“எந்தாதை கூரேசர் இணையடியோன் வாழியே!
எழில் மூங்கிற் குடிவிளங்க இங்கு வந்தோன் வாழியே!
நந்தாமல் எதிராசர் நலம்புகழ்வோன் வாழியே!
நம் மதுர கவிநிலையை நண்ணினான் வாழியே!
பைந்தாம அரங்கர்பதம் பற்றினான் வாழியே!
பங்குனியி லத்தநாள் பாருதித்தோன் வாழியே!
அந்தாதி நூற்றெட்டும் அருளினான் வாழியே!
அணியரங்கத் தமுதனார் அடியிணைகள் வாழியே.

அமுதனார் திருவடிகளே சரணம்